**நவம்பர் - 30**

**"இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்." - மத் 28:20.**

விதைப்பின் வேலையை மேற்பார்வையிட கவனமாயிருந்த அவர் நிச்சயமாகவே அதன் அறுப்பின் சம்பந்தமாக சிரத்தையிலும் கவனத்திலும் குறையுள்ளவராயிருக்கிறதில்லை. கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறோம் என்று நினைத்துக் கொண்டும் அறுப்புக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லவென்றும் ஆனால் நாம் காணக்கூடிய முதிர்ந்த தானியத்தை சேர்ப்பதில் உபயோகிக்கிற நம்முடைய சக்திக்கு மாத்திரம் பொறுப்பாளிகள் என்று நினைத்துக் கொண்டும் நாம் சத்தியத்தின் அறிவாளை சக்தியோடும், தைரியத்தோடும் செலுத்துவோமாக. சில முதிர்ந்த தானியங்களை கண்டு கொள்வதற்காக நாம் எடுத்திருக்கிற பிரயாசம் மிகவும் அதிகமாயிருந்தால், நமக்குக் கிடைத்திருக்கிறவைகளுக்காக நாம் மிகுந்த சந்தோஷப்பட வேண்டியவர்களாயிருந்து அருமையானதும், மதிப்பு மிக்கதுமாயிருக்கிறதை, நேசிக்கவும், உயர்வாக மதிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்த ஊழியத்தில் நாம் நமக்குண்டான எல்லா ஞானத்தையும் உபயோகிக்கும் பொழுது அவருடைய ஊழியத்தில் ஒரு பங்கை நமக்குக் கொடுப்பதிலுள்ள கர்த்தருடைய நோக்கம் ஊழியம் நமக்குக் கொண்டுவருகிற ஆசீர்வாதத்திலுள்ளதுபோல, நாம் நிறைவேற்றக் கூடியது அவ்வளவு பெரிதல்ல என்பதையும் நினைவுகூருவோமாக. **- Z '01, 155 (R 2808).**

நமது கர்த்தர் உயர எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு அவர் சபைக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களில் இது ஒன்று. அவர் தன்னுடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களோடு மானிட உடலில் இருக்கப்போவதாக இது நம்பிக்கை கொடுக்கவில்லை. ஆனால் தன்னுடைய விசேஷித்த தயவு, ஐக்கியம், அனுதாபம், அன்பு,கவனிப்பு, நடத்தல், தடை, பாதுகாப்பு, திருத்துதல், உற்சாகமூட்டுதல், ஆலோசனை, ஒத்துழைப்பு ஆகிய இவைகளின் மூலமாக நம்மோடு கூட இருக்கிறார். சகல நாட்களிலும் அவர் நம்மோடிருக்கிறதின் கருத்து, கர்த்தர் நம்மோடு விட்டுவிட்டு அல்லாமல், ஆனால் தொடர்ச்சியாக தன்னுடைய சபையின் தேவைகளுக்குத் தக்கதாக தனது வாக்குதத்தத்தை முற்றிலுமாக நிறைவேற்றுவதில் ஒரு நாள் கூட கடந்து செல்ல அனுமதியாமல், கர்த்தர் நம்மோடிருப்பார் என்று தோன்றுகிறது. சபையின் சரித்திரம் நிரூபிக்கிறது போல அவர் தமது வாக்குதத்தத்தை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராயிருக்கிறார். இப்பொழுதுள்ள இந்த லவோதிக்கேயா சபையின் காலத்தில் சத்தியத்தை வெளிப்படுத்துவதில், அறுப்பின் சேகரத்திலும், கொழித்தலிலும், நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்திலும், நம்முடைய அனுபவத்தினாலும், கவனத்தாலும், இந்த உண்மைக்கு நாம் சாட்சிகளாயிருக்கிறோம். **– P '33, 162.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யாத் 33:14,15; யோசு 1:5,9; சங் 34:7; 46:1,5,7,11; 105:14,15; ஏசா 41:10; ஏரே 15:20; எசே 48:35; ஆகாய் 1:13, சகரி 2:5; யோவா 14:16-23; 1யோவா 1:3.**

**கோபுர வாசிப்பு : Z `14, 363 (R 5587).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் கர்த்தர் வந்திருப்பதை அனுபவத்தால் அறிந்தேனா? எவ்வாறு அதன் பலன்கள் எவை?**